நூலகம் நிறுவனத்தின் காலாண்டு வெளியீடு

NOOLAHAM FOUNDATION

# புதிய நூலகம்

இதழ் 19 | ஜூலை - செப். 2013

www.noolahamfoundation.org

## 'Open Edit: Mobile Library' மாநாடும் கண்காட்சியும் நிகழ்வில் நூலகம் நிறுவனம்

'ஆசிய கலைக் காப்பகம்' (Asia Art Archive) மற்றும் 'Raking Leaves' அமைப்பினால் இணைந்து நடத்தப்பட்ட இரண்டு நாள் கருத்தரங்கும் கண்காட்சியும் நிகழ்வின் (ஜூலை 6,7) இரண்டாம் நாள் நிகழ்வில் 'நூலகம் நிறுவனம்' இயக்குநர் சிவானந்தமூர்த்தி சேரன் நிறுவனத்தின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி உரை நிகழ்த்தினார். நிறுவனத்தின் உருவாக்கத்தின் போது ஏற்பட்ட தடைகளை வெற்றிகரமாக நீக்கி முன்னேறி வந்த பாதை பற்றியும், இந்த சேவையின் மூலம் எதிர்கால இலக்கு நோக்கியும் பொதுமக்களுக்கான சேவை நோக்கியும் நூலக நிறுவனம் பயணிப்பதை தெளிவாக முன்வைத்தார்.



கண்காட்சியில் ஒரு பகுதி



நூலகம் இயக்குநர் சி.சேரன் உரையாற்றுகிறார்

## 41வது இலக்கிய சந்திப்பில் 'பள்ளிக்கூடம்' திட்டம்

யாழ்ப்பாணத்தில் ஜூலை 20ம் 21ம் திகதிகளில் நடைபெற்ற 41வது இலக்கிய சந்திப்பில் பல்வேறுபட்ட தலைப்புக்களில் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அதன்போது இரண்டாம் நாள் காலை அமர்வில் 'பள்ளிக்கூடம்' திட்டம் பற்றி இத்திட்டத்தின் இணைப்பாளர் சுரேஸ்குமார் கந்தசாமி விளக்கமளித்தார். 'பள்ளிக்கூடம்' திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றியும் அவற்றை முன்னெடுப்பது பற்றியும் திருவரங்கன் மகேந்திரன் முன்வைத்தார்.



இந்நிகழ்வு இராஜேஸ்குமார் சின்னையா (ராகவன்) தலைமையில் நடைபெற்றது.

பிரபல எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்ட கலந்துரையாடலில் பள்ளிக்கூடம் நிகழ்ச்சித்திட்டம் முறைசார் கல்வியை மட்டுமல்லாது முறைசாரா கல்வியையும் மாணவர்களிடம் கொண்டு செல்வது பற்றியும் வசதி குறைந்த மாணவர்களிடம் சென்றடையும் வண்ணம் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பது பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

# க.பொ.த .சா/த மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பாடங்களுக்கான முன்னோடி பரீட்சை கருத்தரங்கு

நூலகம் நிறுவனத்தின் பள்ளிக்கூடம் நிகழ்ச்சித் திட்டமும் ஊவா வெல்லச பல்கலைக்கழக தமிழ் மாணவர்களும் இணைந்து இலங்கையில் 15 மாவட்டங்களில் பின்தங்கிய நிலையில் உள்ள க.பொ.த. சா/த மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பாடங்களுக்கான முன்னோடி பரீட்சை கருத்தரங்கு ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளனர். இக்கருத்தரங் கிற்கான உடன்படிக்கை செப்ரெம்பர் 19ம் திகதி நூலகம் நிறுவன கொழும்பு அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் 'நூலகம் - நோர்வே'யைச் சேர்ந்த திரு.சஞ்சயன் செல்வமாணிக்கம் கலந்து கொண்டு கருத்தரங்கு ஏற்பாட்டுக்குழு தலைவரிடம் காசோலையைக் கையளித்தார்.

இக்கருத்தரங்கிற்கு எதிர்வரும் காலங்களிலும் பள்ளிக்கூடம் நிகழ்ச்சித்திட்டம் தனது பங்களிப்பை வழங்கும் என பள்ளிக்கூடம் இணைப்பாளர் திரு.க.சுரேஸ்குமார் தெரிவித்தார்.



ஏ.அருண்ராஜ் (ஊவா வெல்லச பல்கலைக்கழக பிரதிநிதி), செ. சஞ்சயன் ( நூலகம் – நோர்வே ), க.சுரேஷ்குமார் ( 'பள்ளிக்கூடம்' – இணைப்பாளர்), சி. சேரன் ( 'நூலகம்' – இயக்குநர்)

# 'நூலகம் நிறுவனம்' காப்பாளர்கள் இணைப்பு

பெரும்பாலும் தன்னார்வலர்களின் உயரிய சேவையடிப்படையில் செயல்படும் நூலகம் நிறுவனத்துக்கு பலரும் பக்கபலமாக உள்ளனர். அதன் அடிப்படையில் காப்பாளர்களாக பின்வருவோர் பங்கேற்கின்றனர்.

திரு.பத்மநாப ஐயர்
பேராசிரியர் சி.பத்மநாதன்
பேராசிரியர் சி.மௌனகுரு
கலாநிதி.செல்வி திருச்சந்திரன்
பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
பேராசிரியர் சபா. ஜெயராசா
பேராசிரியர் பரமு. புஷ்பரட்ணம்

# நூலக நிறுவனம் தமிழ் OCR சார்ந்து அடுத்தகட்ட நகர்வு...

நூலக நிறுவனம், யாழ்ப்பாண பல்கலைக்கழக கணனிவிஞ்ஞான பிரிவும், கொழும்பு பல்கலைகழக கணனிக் கல்லூரியும் இணைந்து மேற்கொள்ளும் 'Tamil OCR'* செயற்றிட்டத்தில் எண்ணிமபடுத்தல் சார்ந்த தொழில்நுட்ப பங்காளராக இணைந்து கொண்டுள்ளது.



யாழ். பல்கலைக்கழக கணணி விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி சார்ள்ஸ் அவர்கள் நூலகம் நிறுவனத்தில்

Google 'Tesseract' தொழில்நுட்பம் ஊடாக தமிழ் OCR பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பரீட்சார்த்த முயற்சி இதுவாகும். இதன்மூலம் மிகவும் பழமை வாய்ந்த 1000 தமிழ் ஆவணங்கள் நூலகம் நிறுவனத்தால் எண்ணிமபடுத்தப்பட்டு இப்பொறிமுறை ஊடாக பரிசீலிக்கப்படுகின்றது.

இதன் அடுத்தக்கட்டமாக முற்றுமுழுதான தமிழ் OCR பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பான முயற்சியில் நூலக நிறுவனத்துடன் இணைந்து செயல்பட யாழ்ப்பாண பல்கலைக்கழக கணனிவிஞ்ஞானதுறை தலைவர் கலாநிதி சார்ள்ஸ் அவர்கள் இச்செயல்திட்டம் சார்ந்த ஆரம்ப நிகழ்வில் விருப்பம் தெரிவித்திருந்தார். இவை தொடர்பாக, யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட சில நூல்களும் எம்மிடம் இருந்த பழமையான சில நூல்களும் DSLR புகைப்பட கருவி மூலம் நூலக நிறுவனத்தால் எண்ணிமபடுத்தப்பட்டு இச் செயற்றிட்டத்திற்கு வழங்கப்பட்டது.

* OCR-Optical Character Recognition -
இத் தொழில்நுட்பத்தின் மூலம் மின்வருடிய ஆவணங்களை செப்பனிடக்கூடிய வகையில் மாற்றமுடியும்

# மலையக ஆவணப்படுத்தலுக்கான செயற்பாட்டு குழு

மலையக ஆவணகத்தை விருத்தி செய்யுமுகமாக செயற்பாட்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் மூத்த எழுத்தாளர் திரு.தெளிவத்தை யோசப், திரு.மல்லிகைப்பூசந்தி எம்.திலகர், திரு. லுணுகலை ஸ்ரீ, திரு.வி.தினகரன், திரு.எம்.ஏ.அல்-அஸுமத், திரு.லெனின் மதிவாணம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நூலகம் நிறுவனத்தில் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெற்றது. மலையகம் சார்ந்த ஆவணங்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதுபற்றி ஆழமாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் நூலகம் சார்பில் இயக்குனர் சேரன் சிவானந்தமூர்த்தி மற்றும் நிறுவன தன்னார்வலர்களும் கலந்து கொண்டனர். அத்துடன், மின்வருடல் தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் நிறுவன ஊழியர்களால் வழங்கப்பட்டது.



மிக விரைவில் ஆவணப்படுத்தல் சார்ந்து மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல்களும் மலையக ஆவணபடுத்தல் திட்டமும் மலையகத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டது. இக்குழுவில் திரு.சிவலிங்கம் சிவகுமாரனும் இணைக்கப்பட்டுள்ளார்.

# 'குழு ஒழுங்கமைத்தலும் ஒருமைப்பாடும்' பயிற்சி



நூலக நிறுவனத்தின் குழு ஒருமைப் பாட்டுக்காக அதில் பணிபுரிவோர்-குடும்பத்தவர், தன்னார்வலர்கள் ஒன்றிணைந்து முதல் முறையாக 'ஹோட்டன் சமவெளிப்பயணத்தை' ஒழுங்கு செய்திருந்தனர். இப்பயணத்தில் ஒவ்வொருவரது அறிமுகமும் அவர்களின் இணைந்து பணியாற்றும் பாங்கும் புரிந்துகொள்ளப்பட்டது. குழு ஒழுங்கமைத்தலும் ஒருமைப்பாட்டிற்குமான பயிற்சிக்களமாக இப்பயணம் அமைந்திருந்தது. அத்துடன் செயலளவில் குழு ஒருமைபாட்டின் தேவையை அவசியத்தை பயணத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிறுவன உறுப்பினர்கள் நிரூபித்தனர்.

# நூலகம் நிறுவனம் 2ஆம் கட்ட நகர்வு

தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியால் இயங்கிக்கொண்டிருக்கும் நூலகம் நிறுவனமானது கடந்த 8 வருடங்களில் பல மைல்கற்களை கடந்துள்ளது. நீண்ட கால வேலைத்திட்டங்களை வினைத்திறனோடு முன்னெடுக்கும் நோக்கில் ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் திரு. ச.சண்முகப்பிரியன் அவர்களை நியமித்து தேவையான ஆலோசனைக் கருத்தரங்குகளை நடாத்தியது.

நவம்பர் 1ஆம் திகதி முதல் நூலகம் நிறுவனமானது ஒரு நிகழ்ச்சித்திட்ட துறைசார் விசேட நிறுவனமாகவும் உருவமைக்கப்படவுள்ளது.

## நூலகம் பற்றி...

*நூலகத்தின் தேவை சமூகத்தின் தேவை.அந்த வகையில் இந்த பணித்திட்டங்களில் வேலை செய்வது எனக்கு மிகுந்த மனத்திருப்தியைத் தருகிறது.நூலகம் இன்னும் நிறைய செய்ய வேண்டும்.எல்லோரும் அதற்கு பங்களிப்பும் செய்ய வேண்டும்.*

சர்வேஸ்வரன்
யாழ். பல்கலைக்கழகம்

*இது ஒரு வியக்க தக்க முன்னெடுப்பு.சின்ன சின்ன விடயங்களாக நீங்கள் நிறைய செய்வது எனக்கு ஆச்சரியமூட்டுகிறது.தமிழ் மக்களைக் கவனத்தில் கொண்டு இப்படி ஒரு ஆக்கபூர்வமான வேலையை நூலகம் செய்கிறது, இது மேலும் தொடர வேண்டும்.*

டாக்டர்.நந்த நந்தகுமார்
துணைப் பேராசிரியர்
வி.ஏ. ரெக்,அமெரிக்கா.

# தமிழ் மாணவருக்கான மெய்நிகர் கற்றல் தளம்

நூலகம் நிறுவனத்தினால் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட ‘பள்ளிக்கூடம்’ நிகழ்ச்சித்திட்டத்திற்கு ‘Visions Global Empowerment’ நிறுவனம், உதவி வழங்கியுள்ளது. இலங்கை தமிழ் பேசும் மாணவர்களின் கல்வித்தேவையை பூர்த்தி செய்யும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில், மெய்நிகர் கற்றல் தளம் (Virtual learning platform) ஒன்றை ஆரம்பிப்பதும், அதை தமிழ் பேசும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதும், மாணவர்கள் தங்களைத் தாங்களே மதிப்பிட்டுக் கொள்வதற்கான வசதிகளை நிகழ்நிலையில் ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்த உதவி மூலம் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

நூலகம் நிறுவனம் தனது ‘பள்ளிக்கூடம்’ திட்டத்தை முன்னெடுக்கும் அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணம், கட்டப்பிராய், பருத்தித்துறை வீதியில் ஆரம்பித்துள்ளது. பள்ளிக்கூடம் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்களை www.epallikoodam.org என்ற இணைய முகவரியில் பெறமுடியும்.

# எம்மை நாம் ஆவணப்படுத்துவோம்.!

தமிழ் மக்களிடையே தேநீர் பழக்கம் இல்லாதபோது,அதை அறிமுகப்படுத்த காலை வேளைகளில் கூவி கூவி இலவசமாக அன்றைய ஆங்கிலேய அரசு வழங்கியதை கேள்விப்பட்டுள்ளீர்களா?
மருத்துவமும் சோதிடமும் ஏடுகளில் தமிழில் இருப்பதை அறிவீர்களா?
மலையக மக்களின் வருகையும் வாழ்வும் பற்றி அறிவீர்களா?
இதற்கெல்லாம் ஒரு சிலர் ஆம் என பதிலளிக்கலாம்.
எவ்வாறு?
படித்தறிந்த நூல்களில் இருந்தவை.

தமிழ் மொழி பேசும் இலங்கை சமூகங்களின் வாழ்வும் வளமும் ஓயாமல் பதியப்பட்டு பாதுகாக்கப்பட்டால்தான் அறிவின் உயர்வும் சிந்தனையின் விரிவும் சந்ததி சந்ததியாக கட்டமைக்கப்படும். இல்லையேல் திரும்ப திரும்ப ஆரம்பத்தையே அறிவாக்கி கொண்டிருக்கும் ஒரு பரம்பரையை உலக ஒழுங்கில் இருந்து பின்தங்கிய ஒரு சமூகத்தை உருவாக்க நாம் எல்லோரும் காரணமாகி விடுவோம். ஆவணப்படுத்தல் அதிகாரத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதாக இல்லாது ஒவ்வொரு மக்களாலும் தீர்மானிக்கப்படுவதாக அமையவேண்டும். அப்போதுதான், தஞ்சைப் பெருங் கோவிலைக் கட்டியவன் ராஜ ராஜ சோழனல்ல கட்டுவித்தவன்தான் ராஜராஜ சோழன் என்பதும், பல்லாயிரம் மக்கள் பலநூறு கலைஞர்கள் சம்பந்தப்பட்ட விடயம் இது என்பதும் மக்களுக்கு தெரியவரும்.

எனவே மக்களது எண்ணங்களில் தம் வாழ்வையும் வாழ்வியல் கூறுகளையும் ஆவணப்படுத்தும் ஆர்வம் பெருக வேண்டும்.அதற்கு ஒத்துழைப்பு நல்குவதே ‘நூலகம் நிறுவனம்’. தன்னார்வலர்களின் உயரிய உழைப்பால் உருவாகி இயங்கும் இந்நிறுவனத்தில் மக்கள் எல்லோரும் பங்குதாரர்களே.

*– நூலகி*

எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை எண்ணிம நூலகத்துடன் இணைத்துக் கொள்ளவும் தமிழர்கள் தொடர்பான மிகப் பழமைவாய்ந்த நூல்கள் வெளியீடுகள் இருப்பின் அவற்றை பாதுகாத்து உலகத்தமிழர் மற்றும் தமிழாபிமானிகளுடன் பகிர்ந்து கொள்ளவும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நூலகம் நிறுவனம்

கொழும்பு
இல:7, 57ஆவது ஒழுங்கை ,
கொழும்பு – 06.
தொலைபேசி : 0094 112363261

யாழ்ப்பாணம்
மே/பா. யாழ்ப்பாணம் பொது நூலகம்,
யாழ்ப்பாணம்
தொலைபேசி :0094 212231292

NOOLAHAM
FOUNDATION

புதிய நூலகம் செய்தி மடலின் உள்ளடக்கம் Attribution - share-alike 3.0 Unported (CC BY-SA 3.0) உரிமத்துடன் வெளியாகின்றது.